# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## 2023 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

[*2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2023, நவெம்பர் மாதம் 17 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## **2023 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்**

[*2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.- ஓ. 44/2022*

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1**. இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*262 ஆம் அத்தியாயத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்,

(அ) "முதலாவது நியமனப் பத்திரத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "முதலாவது நியமனப்பத்திரம் மற்றும் மேலதிக நியமனப் பத்திரம் ஆகிய இரண்டிலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கையினருள் இருபத்தைந்து சதவீதத் துக்குக் குறையாதவர்களும் இளம் வேட்பாளர் களாகவிருக்கவேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் முதலாவது நியமனப்பத்திரத்தில்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத் துடன்

(ஆ) "பொருளளவில் முதலாம் அட்டவணையிற்றரப் பட்டுள்ள படிவங்களில் பின்வருவோரின் பெயர்களை எடுத்துக்கூறி" என்னும் சொற் களை நீக்கிவிடுக;

(இ) "எண்ணிக்கையைக் கொண்டிருத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எண்ணிக்கையைக் கொண்டிருத்தல் வேண்டும். ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் எல்லா வட்டாரங்கள் தொடர்பிலும் ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயாதீனக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப் பத்திரங்கள், பெயர்களை எடுத்துக்கூறி பொருளளவில் முதலாம் அட்டவணையிற்றரப் பட்டுள்ள படிவங்களில் இருத்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(2அ) ஆணையாளர், வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம், முதலாவது நியமனப்பத்திரம் மற்றும் மேலதிக நியமனப்பத்திரம் ஆகிய இரண்டிலும் மொத்தத்தில் பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய இளம் வேட்பாளர்களின் ஆகக் குறைந்த எண்ணிக்கையையும் ஒவ்வோர் உள்ளூர் அதிகாரசபையினதும் எல்லா வட்டாரங்கள் தொடர்பிலும் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப் பட்டவாறான முதலாவது நியமனப்பத்திரத்திலும் மேலதிக நியமனப்பத்திரத்திலும் பெயர்குறித்து நியமிக்கப்படுதவற்குப் பெண் வேட்பாளர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கையையும் குறித்துரைத்தல் வேண்டும்:-

(அ) பெயர்குறித்துநியமிக்கப்படவேண்டிய இளம் வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை, முதலாவது நியனப் பத்திரம் மற்றும் மேலதிக நியமனப்பத்திரம் ஆகிய இரண்டிலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட

வேட்பாளர்கள் மொத்த எண்ணிக்கையில் இருபத்தைந்து சதவீதத்தை விஞ்சாத அத்தகையதாக; அத்துடன்

(ஆ) பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய பெண் வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை, முதலாவது நியமனப் பத்திரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிந்தனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் பத்து சதவீதத்துக்குக் குறையாத மற்றும் மேலதிக நியமனப்பத்திரத்தில் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கையில் ஐம்பது சதவீதத்துக்குக் குறையாத அத்தகையதாக,

ஒரு முழுவெண்ணாகவும் பின்னமாகவும் இருக்குமிடத்து, முழுவெண்ணானது இப்பிரிவின் நோக்கத்துக்காகத் தேவைப்பட்ட எண்ணிக்கையாகக் கருதப்படுதல் வேண்டும்.";

(3) அதன் (2அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(2அஅ) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, (2அ) என்னும் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் இளம் வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை, ஆண் வேட்பாளர்கள் மற்றும் பெண் வேட்பாளர்களை உள்ளடக்கலாம் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது."; அத்துடன்

(4) அப்பிரிவின் (2ஈ) மற்றும் (2உ) என்னும் உட்பிரிவுகளை நீக்குவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாகத்தின் 31 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(ஊ) இக்கட்டளைச்சட்டத்தின் 28 ஆம் பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவின்கீழ் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்ற வாறான பெண் மற்றும் இளம் வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கையைக் கொண்டிராதவை.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*